
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல் சுடர்

மார்கழி 1995 ❁ ''மன்று'', 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ❁ 36



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் ''சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்'' இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

போர் அறுந்து பகை உடைந்து
மனித உயிர் அழிந்த நிலை
காணும் எங்கள் வாழ்வினிலே
புது வாழ்க்கை பெறுவதற்கு
புலர்ந்திட்ட புது வருடம்
மின்னிடட்டும் எம்மிடத்தில்
நிம்மதியைத் தந்திடட்டும்
என்றுகூறி வாழ்த்துகின்றோம்
எங்கள் அபிமான நெஞ்சங்களை

(ஆசிரியர்)

ஆசிரியர் குழு

திரு. கா. நடராஜா — செல்வி கு. ஜசிந்தா
திருமதி வி. இராமச்சந்திரா — திருமதி யோ. புவனேந்திரன்
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர் — செல்வி க. லீலா




## உள்ளடக்கம்

மீண்டும் கொலஸ்தரோல் — 2
திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்
இந்துக்கள் வாழ்வில் மரங்கள் — 3
திரு. சா. விவேகானந்தன் (வேலூரான்)
கொய்யாப் பயிர்ச் செய்கை — 4
திரு. கு. சண்முகம்
கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே போ. இ. 16 — 4
சுற்றாடற் கல்வி — 5
திருமதி. யோ. புவனேந்திரன்
காடழித்தலும் சூழல் சமநிலையில் — 6
செல்வி. ம. தரினா பபியோலா
காலநிலை மாற்றமும் உயிரினப் பரம்பலும் — 8
திரு. வ. இராமலிங்கம்
1995ஆம் ஆண்டு சூழல் மன்றங்கள் — 10
திரு. த. பகீரதன்
1995ஆம் ஆண்டு மர நடுகை — 10
திரு. வ. இராமலிங்கம்
கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே; — 11
போ. இ. 13ன் விடைகளும், முடிவுகளும்
கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே; — 11
போ. இ. 14ன் விடைகளும், முடிவுகளும்
முந்திரிகைப் பழப்பாணி — 11
திருமதி. நடேஸ்வரி நவரெத்தினன்
இம்மாதச் செய்திகள் — 12

தூசிகள் மாசுகள்
புகுவது பூமியில்
வீசிவிடும் உங்கள்
பணத்தாசையால் தானே
ஊருக்கு உபதேசம்
உமக்கில்லை போலும்
வீணாக எங்களை
குறை சொல்வதேனோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கொலஸ்தரோல்

யோ. இ. கிறிஸ்ரோப்பர்

சென்ற மாத இதழில் தென்னை உற்பத்திப் பொருட்கள், கொலஸ்தரோல், அளவுகள் நன்மை, தீமை பற்றிப்பார்த்தோம். மேலும் சில கருத்துக்கள் கூறப்பட வேண்டியுள்ளன.

இந்தியர்களில் பெரும்பாலோர் வாழ்நாள் முழுவதும் தாங்கள் மரக்கறி உணவாளர்களே என்று மார்தட்டிக் கொண்டாலும் வேறு எந்த மக்களினங்களை விடவும் இந்தியர்களே இதய தாக்கத்திற்கு அதிகமாக ஆளாகிறார்கள் என்று சிகாகோ இதயநோய் நிபுணர் டாக்டர் ஏ.ஏனாஸ் கூறுகிறார். (நல்வழி, மே 1995)

இவ்வாய்வு அயல் நாடுகளில் வசிக்கும் சுமார் 2000 இந்தியாகளிடையே நடத்தப்பட்டது. இதற்கு, மரபு வழியாகவே இந்தியர்களின் இரத்தத்தில் லிப்போ புரோட்டீன் என்னும் ஒரு வகை கொலஸ்தரோல் அதிகமாகக் காணப்படுகின்றது என்னும் காரணமும் காட்டப்படுகின்றது.

இதில் உண்மை இருக்கலாம். ஆனால் மரபு வழி என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. ஏனென்றால் மரக்கறி உண்போர் பொதுவாக பால், தயிர், வெண்ணெய் போன்ற விலங்கு உணவுகள் தினம் தமது உணவில் சேர்ப்பதுண்டு இவ்வுணவுகளில் அதி செறிவுள்ள கொழுப்பு உள்ளதனால் கொலஸ்தரோல் மிகுதியாக உண்டு.

ஆனால் உணவிற்குப் பயன்படும் கொட்டைகள், வித்துக்கள் போன்றவற்றில் சேமிக்கப்பட்டுள்ள உணவு கொழுப்பு வடிவத்தில் இருந்தாலும் விலங்குக் கொழுப்பை விட செறிவற்றதாக இருப்பதனால் எளிதாக செமிபாடடையக் கூடியவை.

எனவே மரக்கறி உண்போர், பாலாடை அகற்றிய பால் அன்றி மோர் (கடைந்த தயிர்) பாவிக்கும் பட்சத்தில் கொலஸ்தரோல் பிரச்சினைக்குள்ளாக மாட்டார்கள். இறக்குமதி செய்யப்பட்டு பலவித அபூர்வ விளம்பரங்களுடன் விற்பனை செய்யப்படும் கனவான்களின் உணவு வகைகளான வெண்ணெய்க் கட்டிகள் (Butter) மாஜரீன் வகைகள் எமது இதயத்திற்கு ஊறுவிளைவிப்பன.

அண்மையில் குருதி அழுத்த ஆய்வு இலங்கையில் நடத்தப்பட்ட பொழுது கண்டறிந்த உண்மை என்னவென்றால் மது அருந்துவோரின் குருதி அழுத்தம் உயர்வாக இருந்ததாகவும் இவர்கள் இதய நோய்க்குட்படுவது தடுக்க முடியாதது என்றும் கண்டறிந்தனர்.

இதய நோய் பின்னடையச் செய்ய வேண்டுமாயின், சமச்சீர் உணவில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விலங்குணவுகள் இறைச்சி, மீன், வெண்ணெய் போன்றவற்றை முடியுமான அளவு குறைத்து அதிகளவு பயறு, பருப்பு, கொட்டைகள், தானியங்கள், காய்கறிகள், இலை வகைகள், ஆடை நீக்கிய பால், வாரத்திற்கு மூன்று முட்டைகளுக்கு மிஞ்சாமல் உங்கள் உணவில் சேருங்கள். இவற்றில் நார்ப்பொருட்கள் போதுமான அளவு இருப்பதால் எமது உடல் நலத்திற்கு மிக நன்று.

நல்ல உணவுப் பழக்கத்துடன் மன இறுக்கத்தைக் குறைக்கும் வழி முறைகளிலும் ஈடுபடுதல் வேண்டும், உடலைத் தளர்த்தல், தியானம், உடற்பயிற்சி, ஆழ்ந்த மூச்சிப் பயிற்சி போன்றவை மூலம் ஆரோக்கியமாக இருப்பதுடன் எமது நாளாந்த செயற்பாடுகளைத் திறமையுடன் முன் எடுத்துச் செல்லலாம்.

**இறைவனின் படைப்புக்களில் மனிதனே உயர்ந்தவன். அவனே உலகப்பொருட்களை அதிகளவில் பயன்படுத்துபவன். எனவே உலகை காக்கும் பொறுப்பும் மனிதனுடையதே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் வாழ்வில் மரங்கள்

ஆக்கம்: திரு. சா. விவேகானந்தன் (ஆசிரியர்) வேலூரரான்

சனாதன மதமான இந்து மதத்தில் பல மரங்களின் இலைகள், கொப்புகள், கனிகள், தளிர்கள் என்பன இறைவனுக்குப் படைக்கப்படுகின்றன. இம்மரங்கள் செடிகளைக் கொண்டு மனிதர்களுக்கு ஏற்படும் எல்லா விதமான கொடூர நோய்களையும் எம்முன்னோர்கள் போக்கி வந்தனர். தெய்வங்களுக்கு வைத்துப் படைக்கப்படும் இம்மரங்கள், செடிகள் அனைத்திற்கும் ஒவ்வொரு சிறப்புக் குணாதிசியங்கள் உள்ளன.

நம் முன்னோர்கள், இத்தகைய மூலிகை மரஞ் செடிகளுக்கும் மனித உடற்கூறுகளின் இயக்கத்திற்கும் தொடர்பு உள்ளதை அறிந்து, இவற்றை உண்பதால் உள்ள பலன்களையும் பயன்களையும் பாக்களாக, வாகடமாகக் தொகுத்து எழுதிவைத்தனர். அதை இன்றைய நவீன விஞ்ஞானக் காலத்தில் யாரும் மதிப்பதாகத் தெரியவில்லை. இதனால்தான் எம்முன்னோர்களே, இவற்றைப் பறித்துக் கடவுளின் முன்வைத்துப் பிரசாதமாக இலைகளைக் கொடுத்து, அதை உண்ணவும் வைத்தனர். இந்நிலை தொடர்ந்தும் எமதாலயங்களில் நடைமுறையிலிருப்பினும் குறித்த சில மரஞ்செடிகள் எம்மத்தியில் இல்லாமையாலும் நவீன ஆடம்பரங்காரணமாகவும் மக்கள் உண்ண முடியாதுள்ளனர். இதனால் நோய்களுடன் ஆரோக்கியம் குன்றிய வாழ்வை மக்களடைகின்றனர். இவ்வாறு ஏதாவதொரு விஷேச நாளில் கசப்பு, துவர்ப்பு சுவை உடைய சில மூலிகை மரஞ்செடிகளின் இலை, காய்களை சாப்பிட்டுவரின் உடல் உபாதைகளில் இருந்து தப்பலாம். ஏன்? சித்திரைப் புத்தாண்டில் நாம் வைக்கும் மருத்து நீருக்கும் புறக்கிருமிகளை அழிக்கும் சக்தி உண்டல்லவா?

எனவே வீட்டுக்கும் நாட்டுக்கும் நலம்தரும், எம்மினத்தை ஆரோக்கியமானதாக உருவாக்கவும், சூழலின் ஒரு சிறப்பு மாற்றத்தையும் ஏற்படுத்த எமது ஆலயங்களுக்குரிய சிறப்பு மரங்களை வளர்ப்போமாக.

1. அரச மரம்

இந்து மதத் தெய்வங்களுள் முதல் வணக்கம் செலுத்தும் வினாயகப் பெருமான் வீற்றிருந்து அருளாட்சி நடாத்துவது அரசமரத்தடியில்தான் பல ஆலயங்களில் இது தலவிருட்சமாக உள்ளது கீதையில் கிருஷ்ண பஹவான் மரங்களுள் தான் அரசமரம் என்று அழகாகக் கூறியுள்ளார் (விபூதி யோகம் 26) இதனால் அரசமரத்தை ''அச்வத்த நாராயணனாக'' இந்துக்கள் வணங்குகின்றனர். இம்மரத்தின் இலை, காய், பூ என்பன எதற்கும் பயன்படாவிடினும் பகவான் இதை ''விசேஷ விபூதி'' என்கிறார்.

2. வேப்ப மரம்;

இது மருத்துவக் குணங்கொண்டது. குழந்தை பிறந்த வீட்டிலும், அம்மை நோய் கண்டிருக்கும் வீட்டிலும் வாசலிலும் வேப்பிலையைக் கொத்தாகக் கட்டிவைப்பதால் வீட்டின் உள்ளே நோய்க் கிருமிகளின் தாக்கம் குறைக்கப்படும்.

இது அம்மனுக்குப் படைக்கும் மூலிகை மரம் பொதுவாக அம்மன் சடங்கு அல்லது திருவிழாக்கள் கோடையில் கொண்டாடப்படுகின்றன (சித்திரை-ஆடி) இக்காலங்களில் வறட்சியினால் நோய் கிருமிகள் உலர்ந்த காற்றிலும், மண்ணிலும் காணப்படும். நீர் நிலைகளில் இவற்றின் செறிவு அதிகமாகும். இதனால் நீரால் அதிக நோய்கள் மக்களுக்குப் பரவக்கூடும். இதனால் கோடையில் அம்மனுக்கு விழா எடுத்து வேப்பிலை படைத்து அதை உண்ணக்கொடுப்பர். தினமும் 5 முற்றிய வேப்பிலைகளை மென்று விழுங்கினால் நோய் ஒன்றும் அணுகாது; குருதியும் சுத்தமாகும்.

அரசமரத்தை நாயகனாகவும், வேம்பை நாயகியாகவும் இணைத்து வணங்குவர். இவ்விரு மரங்களை வணங்கும்போது உடலில் மின்காந்த மாறுதல் ஏற்பட்டு நாளமில் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. இதனால் மலட்டுப் பெண்ணின் சூலகம் தூண்டப்பட்டுச் சுரப்பு நீர்கள் சமத்துவம் பெறும். கருப்பை வளர்ச்சியுற்று பக்குவம் பெறுகிறது. இதனால்தான் குழந்தை வேண்டும் என ஏங்கும் திருமணமான பெண்கள் அரசும் வேம்பும் இணைந்த மரத்தைச் சுற்றி வலம் வந்து நேர்கடனாக மரக்கிளையில் தொட்டிலும் கட்டிக் கொள்கின்றனர் குழந்தை ஈன்ற தாய்க்கு, அவளது உடம்பில் கிருமிகளைப் போக்கவும், ஆரோக்கியமான உடல் நலனுக்காகவும் இம்மரப்பட்டை இலை ஆகியவற்றுடன் இன்னும் பல மூலிகைகளைச் சேர்த்து அவித்து தீர்த்தம் வேது வார்க்கின்றனர்.

தொடர்ச்சி... 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## கொய்யாப் பயிர்ச் செய்கை

ஆக்கம்: திரு. கு. சண்முகம் (ஆசிரியர்),
மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம்.

நமது மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிகரமாகப் பயிரிட்டு அதிக பயனைப் பெறுவதோடு நமது சூழலையும் தண்மையூட்டக்கூடிய பல்லாண்டுப் பயிர் கொய்யாவாகும்.

இதன் தாவரவியத் பெயர் - கிடியம் குவாவா
குடும்பம் - ருடேசி

உயிர்ச்சத்து ''சி'' அடங்கியுள்ள பழம் கொய்யாவாகும். கல்சியம், பொசுபரசு போன்ற கனிப்பொருட்களும் இதிலுண்டு. ஈர உலர் வலயங்களுக்குப் பொருத்தமான ஒரு தாவரமாகும். இதன் பழம், பழமாக உண்பதற்கும், பழப்பாகு, ஜெலி போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது

**இனங்கள்:**

செபீடா ஊதா நிற இனம்
அலகாபாத் கல்கடா இனம்
விதையற்ற கொய்யா இனம் சீன இனம்
என்பன குறிப்பிடத்தக்க இனங்களாகும்.

கொய்யா பயிரிடுவதற்காக நடுகைப் பொருட்களாக வித்துக்கள் மூலமும், பதியவைத்தல் மூலமும் பெறலாம்.

**வித்துக்கள் மூலம் நாற்றுக்கள் பெறுதல்**

வித்துக்களில் முளைதிறன் ஒரு வருடம் வரை காணப்படும். நாற்றுமேடைகளில் வித்துக்களை நாட்டி 30 செ.மீ. வரை வளர்ந்தபின்பு அவற்றைத் தயார் செய்யப்பட்ட குழிகளில் சேதனப் பசளையிட்டு நாட்டலாம். கொய்யா வித்துக்கள் அதிக காலம் சென்றே முளைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**நடுகை**

கொய்யாக் கன்றுகள் 5மீ-6மீ இடைவெளிகளில் நாட்டவேண்டும்.

நன்கு நீர்ப்பாய்ச்சி பசளையிட்டுப் பராமரிக்கப்பட்ட கொய்யாத்தாவரம் வித்து மூலமான தாவரமாக இருந்தால் நான்கு வருடங்களிலும் ஒட்டு அல்லது பதியவைத்தல் மூலம் பெறப்பட்ட தாவரமாயின் இரண்டு வருடங்களிலும் காய்க்கத் தொடங்கும். பொதுவாக 8 - 10 வருட வயதை அடைந்த கொய்யாத் தாவரத்திலிருந்து வருடமொன்றுக்கு ஆயிரம் காய்கள் வரை பெறலாம்.

**நோய்ப்பீடை**

கொய்யாத் தாவரத்தைப் பாதிக்கக்கூடிய குறிப்பிடத்தக்க நோய் எதுவும் இல்லையாயினும் காய்களைத் துளைத்து சேதப்படுத்தும் ஒருவகைப் புழு காணப்படுகிறது. இதற்கு அடுப்புச்சாம்பல் அல்லது மலத்தீன் தூள் விசிறலாம்.

குரங்கு, அணில், வௌவால் போன்ற உயிரினங்கள் கொய்யாக் காய்களை விரும்பி உண்ணும். எனவே, இவற்றுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இவற்றை விரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது பிரதேசத்தில் எந்த நிலத்திலும் ஆரம்ப நீர்ப்பாய்ச்சல், பசளையிடலுடன் செழித்து வளர்ந்து மிக நீண்டகாலம் நல்விளைவு தரக்கூடிய கொய்யாவை நாமும் நமது வீட்டு வளவுகளில் நட்டு நமது சூழலை வளம்படுத்துவோம்.

## கண்டு பிடியுங்கள்; பரிசு உங்களுக்கே;

### போட்டி இல. 16

01. மீனில் காணப்படும் பிரதான உணவுப் பொருள் எது?
02. குடல்புண் நோய்க்கான (அல்சர் ulcer) உடனடிக் காரணி என்ன?
03. புகைபிடிக்கும் ஒருவருக்கு வரும் நுரையீரல் தொடர்பான நோய் எது?
04. வியர்வையில் காணப்படும் நீர் தவிர்ந்த பொருட்களிலொன்று கூறுக?
05. சாதாரண மனிதனொருவன் நாளொன்றுக்கு வெளியேற்றும் சிறுநீரினளவு எவ்வளவு?
06. வியர்வையில் காணப்படும் நீரினளவு எவ்வளவு?
07. உலகில் காணப்படும் மொத்த விலங்கினங்களின் எண்ணிக்கை அண்ணளவாக எவ்வளவு?
08. மனித உடலில் யூரியாவினை உற்பத்தி செய்வது எது?
09. உலக சுகாதார தினம் கொண்டாடப்படுவது எத்தனையாம் திகதி?
10. வளியில் சடத்துவ வாயுவின் வீதம் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடற் கல்வி

திருமதி. யோ. புவனேந்திரன்

### கழிவு வெளியேற்றலும் பாதிப்பும்:

பாரிய கைத்தொழில் நடைபெறும் இடங்களில் கழிவுகளைத் தகுந்த முறையில் வெளியேற்றாவிடின் அங்கு சூழல் மாசடைய ஏதுவாக அமைந்து விடும். மட்டக்களப்பைப் பொறுத்த மட்டில் பாரிய தொழிற்சாலைகள் மிகமிகக் குறைவாகும். மட்டக்களப்புக் காகித ஆலை, காத்தான்குடி நகருக்குள் சாயமிடுதல், ஐஸ் தொழிற்சாலை, அரிசி ஆலை போன்றவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகளைத் தகுந்த முறையில் அகற்றாததால் அந்நகரச் சூழல் மாசுற்றுள்ளது. கிணறுகளெல்லாம் சாயப் படிவுகள் சேர்ந்து குடிநீர் வசதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. ஐஸ் தொழிற்சாலையால் சுத்தமான சுவாசமின்றித் தவிக்கின்றனர். எனவே தகுந்த முறையில் கழிவகற்றலை மேற்கொள்ளவேண்டும்.

### செயற்பாடு:

1. மாணவர்களே உங்கள் கிராமத்தில் இவ்வாறு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டதுண்டா? ஆமெனில் குறிப்பிடுக.
2. இக்கழிவுகளை என்ன செய்யலாம் என உங்கள் ஆசிரியருடன் கலந்தாலோசியுங்கள்.

### 4. இயற்கைச் சட்டங்கள்:

4.1. இயற்கைச் சட்டமும் ஆரம்பித்த இடமும்

| | |
|---|---|
| 1. | 6. |
| 2. | 7. |
| 3. | 8. |
| 4. | 9. |
| 5. | 10. |

1. உங்களுக்குத் தெரிந்த இயற்கைச் சட்டங்களைக் கூறுக.

#### 4.2. இயற்கைச் சட்டத்தின் நன்மைகள்:

இயற்கைச் சட்டமானது இயற்கை வளங்களை மனிதன் பயன்படுத்தும்போது ஒரு வரையறையுடன் பயன்படுத்துவதற்கும் வளங்களைப் பேணுவதற்கும் இவ்வியற்கைச் சட்டங்கள் உதவுகின்றன.

#### 4.3. நினைவு நாட்கள்:

1. மண்காப்புத் தினம் — ஏப்ரல் 22
2. சூழல் தினம் — யூன் 05

### 5. மட்டக்களப்பில் உள்ள நீர் நிலைகளைக் கூறுக.

5.1.

#### 5.2. பயன்பாடுகள்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு, கடல், குளம், வாவி, ஓடை என்பன காணப்படும். நீர் நிலைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள், இவை மக்கள் மத்தியில் எப்படி முக்கியத்துவம் பெற்றவை என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்

1. கடல்

மீன், இறால், நண்டு, அட்டை போன்ற உணவுப் பொருட்களைப் பிடிக்கின்றோம். சிப்பி, ஊரி, முத்து, போன்ற பெறுமதியுள்ள பொருட்கள் கிடைக்கின்றன. இங்கு முருகைக் கற்கள் உற்பத்தியாகின்றன.

2. குளங்கள்:

இங்கு குளங்கள், சிறிய குளங்களென்றும், பெரிய குளங்களென்றும் வகைப்படுத்தப்படுகின்றன. உன்னிச்சைக் குளம், உறுகாமக் குளம் என்பன பெரிய குளங்களுக்கு உதாரணங்களாகும். ஈர்ரளக்குளம், களுதாவளைக்குளம் என்பன சிறிய குளங்களுக்கு உதாரணங்களாகும். இக்குளங்கள் அனேகமாக நெற்செய்கைக்காகவே பயன்படுத்தப்படுகின்றது.

3. ஆறு, வாவி:

ஆறுகளும், வாவிகளும் மீனினங்களும், வேறு உயிர்களும் தாவரங்களும் இவைகளில் வளர்கின்றன. மீன், இறால், மட்டி போன்றவை உணவிற்

தொடர்ச்சி... 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடழித்தலும் சூழல் சமநிலையில் அதன் தாக்கமும்

ஆக்கம்: செல்வி. ம. தரினா பபியோலா,
மட்/இந்துக் கல்லூரி, விஞ்ஞானப் பிரிவு 1ம் வருடம்

காடழித்தலால் சூழல்சமநிலையில் ஏற்பட்ட தாக்கங்கள் பற்றி ஆராயும் முன் உலகம் எவ்வாறு தோன்றியது...? காடுகளை மனிதன் ஏன் அழிக்க முற்பட்டான் என சிந்தித்தல் அவசியமாகும்.

இற்றைக்கு 4,600 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இந்த உலகமானது சூடுமிகுந்த வாயுக்களிலிருந்தும், புழுதியிலிருந்தும் உருவாகியது. 3600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கல அங்கி அல்லது பக்டீரியாவிலிருந்து ஆரம்ப இனம் தோன்றியது. இருப்பினும் ஒரு லட்ச ஆண்டுகளுக்கு முன்தான் மனித இனம் தோன்றியது எனலாம். இம்மனித இனமானது 10,000 ஆண்டுகளுக்கு முன் விவசாயம் செய்யவும், மிருகங்களை வளர்க்கவும் தொடங்கியது. அன்று முதல் இன்று வரை தன் தேவைகளை நிறைவு செய்வதற்காக இயற்கையை அழித்துக்கொண்டே வருகின்றான். வளர்ந்துவரும் சமுதாயப் பெருக்கமும், மனிதனின் அளவிற்கு அதிகமான ஆசையுமே இன்று சூழல் சமநிலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ஒரு மனித சமுதாயத்திற்கு உணவு, உடை, உறையுள், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி இவைகளுக்குக் காடுகள் இன்றியமையாததாகும். இருப்பினும் கடந்த 40 வருடங்களில் மனிதன் அபிவிருத்தி எனும் போர்வையில் இயற்கைக் காடுகளை அழித்திருக்கும் அளவு இன்று உலக சரித்திரத்தையே மாற்றியமைத்துப் பல தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தாக்கங்கள் அமிலமழை என்றும், ஓசோனில் ஓட்டை என்றும், பசுமை வீட்டுத்தாக்கம் என்றும். அபாயகரமான விளைவுகளை எமக்குத் தந்துள்ளன.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் வளிமண்டலத்துடன் சேர்ந்து அமிலமாக மாறி மழையாகப் பெய்வதே அமில மழையாகும். இவ் அமில மழையானது உயிரினங்களை அழிக்கவல்லது. நீர் நிலைகளையும் மண்ணையும் கூட அமிலமாக மாற்றியமைத்து உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் அழிவை உண்டுபண்ணுகின்றது. ஆனால், தாவரங்கள் தாராளமாகக் காணப்படும்போது, இக் கழிவுப் பொருட்களைத் தம்மகத்தே வடிகட்டி வளிமண்டலத்தை பேணிப் பாதுகாத்திருக்கும். காடுகளை வெட்டி வீழ்த்தியதாலேயே இன்று இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

அடுத்து பசுமை வீட்டுத் தாக்கத்தை நோக்கின் பலவகையாலும் ஆகாயத்திற்கு வெளியேற்றப்படும் வாயுக்கள் வளிமண்டலத்திலே உலகைச் சுற்றி ஒரு கூரைபோல் அமைந்து சூரியனிலிருந்து பெறப்படும் வெப்பசக்தி மீண்டும் வெளியேறாதபடி தடுப்பதால் வளிமண்டல உஷ்ணம் அதிகரிக்கின்றது. இதனால் வட, தென் துருவங்களில் உள்ள பனிமலைகள் உருகி சமூத்திரங்களில் நீர் மட்டம் உயர கடலோரங்கள் நீரில் அமிழ்ந்துவிடும் அபாயம் ஏற்படக்கூடும். காடுகளை வெட்டி எரிப்பதால் பசுமைவீட்டுத் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அடுத்து இன்று பலரின் வாயிலும் பரவலாகப் பேசப்படும் ஓசோனில் ஓட்டையை நோக்கின் நிலத்திலிருந்து 15 – 30 மைல் தொலைவில் இயற்கையாக அமைக்கப்பட்ட ஓசோன் படையானது சூரியனிலிருந்து வீசப்படும் உயிரினங்களுக்குத் தீங்கினை விளைவிக்கக்கூடிய புறஊதாக் கதிர் வீச்சில் 1%த்தை மாத்திரம் வெளிவிட்டு மற்றைய 99% கதிர்களை உறிஞ்சிக் கொள்ளும். இவ்வாறான செயற்பாடு நடைபெறுவதால்தான் இன்று உலகிலே உயிரினங்கள் வாழ்கின்றன. ஆனால் இன்று மிதமிஞ்சிய அபிவிருத்தி காரணமாக வெளியேற்றப்படும் தீய வாயுக்கள் பல ஓசோன் வாயுவுடன் தாக்கமடைந்து படையிலே குழிகளை ஏற்படுத்தி உள்ளது. இதனால் புறஊதாக்கள் அதிகளவில் பூமியை வந்தடைகின்றன. தாவரங்களிலும் விலங்குகளிலும் இயற்கையாக அமைந்துள்ள நோயெதிர்ப்புச் சக்தி குறைந்துவிடுகின்றது இதனால் கண், மார்பு, தோல் போன்ற நோய்கள் அதிகளவில் இன்று ஏற்படுகின்றது. இதற்குக் காரணம் காடழித்தலே. காடுகளை வெட்டி எரிப்பதால் காபனீரொட்சைட்டு அதிகளவில் வளிமண்டலத்தை அடைகின்றது. மற்றும் இயற்கை அன்னையின் மானத்தைக் காக்க ஆடையாக அணியப்பட்டது இம்மரங்களே. இன்று காடுகள் அழிக்கப்படுவதால் இயற்கையின் சீற்றத்திற்குப் நாம் ஆளாகின்றோம். உதாரணமாக 1978ஆம் ஆண்டு மட்டக்களைப்பை ஆட்டிப்படைத்த கொடிய புயலிற்குப் பின் மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டதால் இயற்கை சமநிலை தளர்த்தப்பட்டு கால நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது.

தொடர்ச்சி... 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3ம் பக்கத் தொடர்ச்சி...)

**இந்துக்கள் வாழ்வில்...**

மனித வாழ்விலன்றி பயிர்ப்பீடைகளை அழிப்பதிலும் இம்மரப்பட்டைச்சாறு பயன்படும்.

**3. வில்வ மரம்**

சிவனுக்குரிய இம்மரம் 'சிவத்துருமம்' என்றும் அழைக்கப்படும். வில்வ இலை மனக்கோளாறுகளை நீக்கும் தன்மையது. இருதயம், நுரையீரல் நோய்களைத் தீர்க்கும் மருந்தாக இது பயன்படுகின்றது. வில்வம் பழத்தைத் தலையில் தேய்த்துக் குளிப்பதனால் குளிர்ச்சி உண்டாவதுடன் பேன் தொல்லையும் குறையும்.

கசப்பும் துவர்ப்பும் கலந்த ருசி உடைய வில்வ இலை ஜீரண உறுப்புக்களைத் தூண்டி நல்ல பசியை உண்டாக்கும். அஜீரணம், வயிற்று உபாதைகள், வயிற்றுப்புண், மலச்சிக்கல், வாயுத் தொல்லை போன்ற குறைபாடுடையவர்கள் தினமும் 5 வில்வ இலைகளை மென்று உண்ணுதல் நலம்.

**4. அசோக மரம்**

அன்பின் அடையாளமாகவும், காதல் தெய்வம் மன்மதனுக்குரிய மரமாகவும் இது காணப்படுகின்றது. மன்மதனில் ஐந்து புஷ்ப பாணங்களில் அசோக மரத்துப் பூவும் ஒன்று. இம்மரம் துக்கம், வேதனை என்பவற்றை நீக்கும். சீதை அமர்ந்த மரமும் இதுவே. எமது இந்துக் காதலர்கள் தமது காதலின் அடையாளமாக ஒவ்வொருவரும் நட்டால் எமது மக்களின் வேதனை, துக்கம் என்பன குறையுமல்லவா? இம்மரத்தின் பட்டைச்சாறு கருப்பைக்கு நலன் தரும்.

**5. வாழை மரம்**

இது விசேட காலங்களில் மங்களம் தரும் மரமாகும். திருமணத் தம்பதியர் முதன் முதல் உண்ணும் பழமும் இதுவேயாகும். வாழை இலை இறைவனுக்கு நெய்வேத்தியம் படைக்கவும், உணவுண்ணலுக்கும் பெரிதும் பயன்படுகின்றது. வாழைப்பழத்தில் மூளை வளர்ச்சிக்குரிய 'செரோடீனை' உருவாக்கும் தன்மை உள்ளது. மேலும் இப்பழத்தை உண்பதால் புன்னகை, மனதில் மகிழ்ச்சி, என்பன ஏற்படுகிறது. மேலும் வாழை நார் மூலம் சாக்குகள் தயாரிக்கவும் முடியும். அம்மன் ஆலயங்களில் இவ்வாழைப்பழம் படையலுக்கும், தீர்த்தத்திற்கும் (பாணக்கம்) பெரிதும் பயன்படுகிறது.

**6. நெல்லி மரம்**

பிரம்மதேவனால் உற்பத்தி செய்யப்பட்ட இம்மரம் பற்றிக் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. இம்மரம் காமம், கோபம், மயக்கம் ஆகிய தீய பண்பைக் குறைக்கும் என்றும் கூறப்படுகிறது. முனிவர்கள் நெல்லியை 'காயகல்பம்' தயாரிக்கப் பயன்படுத்துவர் நெல்லியின் சாற்றிலுள்ள ஒரு வகை அமிலம், இளமை உயிரணுச் சிதைவைத் தடுக்கும் தன்மையது. சுச்ருதரின் 'சரகசம் உறிதை' எனும் நூலின் இருதயக் கோளாறுக்கு நெல்லிக் கனிச்சாறு சிறந்த மருந்து எனக் கூறப்பட்டுள்ளது. இதனை மொஸ்கோ உயிரியல் விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

நெல்லிக்கனி குளிர்ச்சி தருவதால் ஏகாதசி விரதத்திற்கு மறுநாள் நெல்லியைத் தயிருடன் கலந்து துவாதசி உணவாகப் பெரிதும் விரும்பி உண்பார்கள்.

(தொடரும்...)

(5ம் பக்கத் தொடர்ச்சி .)

**சுற்றாடற்கல்வி...**

கின்றன. மீன், இறால், மட்டி போன்றவை உணவிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த உயிர்கள் வளர்வதற்கும், பெருகுவதற்கும் ஏதுவான சூழலை உருவாக்குவது இவற்றிற்கு அருகில் வளரும் கண்டல் தாவரங்களே எனலாம். கண்ணா, கிண்ணை, தில்லை என்பன இவற்றிற்கு காரணங்களாகும். இன்று மட்டக்களப்பு வாவியை எடுத்து நோக்கின் விறகிற்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் இத்தாவரங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இன்னும் சில குறிப்பிட்ட வருடங்களுக்குள் இவற்றில் வாழும் உயிரினங்கள் முற்றாக அழியக்கூடும்.

கண்டல் காணப்படும் இடங்கள் –
வாகரை, மட்டக்களப்பு,

செயற்பாடு

1. மட்டக்களப்பில் காணப்படும் 5 வாவிகளின் பெயர்களைத் தருக.
2. களப்பு ஒன்று கூறுக.
3. இறால் எங்கு உற்பத்தியாகின்றது?
4. கடலில் இருந்து எடுக்கும் உணவுகள் சில கூறுக.
5. உமக்குத் தெரிந்த பெரிய குளங்கள் 2 தருக
6. உங்கள் கிராமத்தில் தூர்ந்துபோன குளங்கள் ஏதாவது உண்டா?
7. மட்டக்களப்பு வாவி மீனினங்கள் சில வற்றைக் கூறுக?
8. கண்டல் தாவரங்கள் 2 தருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

## காலநிலை மாற்றமும் உயிரினப் பரம்பலும்

ஆதாரம்: Tiempo, February 1992     தொகுப்பு: திரு. வ. இராமலிங்கம், மன்று

காலநிலை மாற்றம் தற்போது துல்லியமாக உணரப்படுகின்றது. விஞ்ஞானிகள் எதிர்வு கூறியுள்ளார்கள். உலக வெப்பநிலை 3° செ'டிகிரியாக ஒவ்வொரு 10 வருடத்திற்கும் உயர்ந்து கொண்டு வருகின்றது. அதாவது பசுமை வீட்டுத் தாக்கம் தற்போதைய உஷ்ணநிலை தொழில்மயமாக்கப்பட்ட காலத்தைவிட 5° செல்சியஸ்ஸாக உயர்ந்துள்ளது. அடுத்த நூற்றாண்டிற்கிடையில் 3° செல்சியஸ்ஸாக இவ்வெப்பநிலை உயரக்கூடும் எனத் தெரிகின்றது.

எதிர்பாராத விளைவுகள் பொருளாதாரத்தின் சமூகத்திலும் இயற்கையிலும் நேரலாம். உலகளாவிய ரீதியில் தாழ் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கும், சனத்தொகை கூடிய பகுதிகளிலும் இவ் உஷ்ண அதிகரிப்பு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. உஷ்ண அதிகரிப்பு கடல்நீர் மட்ட உயர்வை ஏற்படுத்தும்.

மனித வர்க்கத்திற்கு அவசியமான உயிரியல் பரம்பல்கள் பாதிக்கப்படும். இவ்விதம் இவ்வினங்கள் அடையும்போது மனிதன் தனது நிலையான வாழ்வை அமைத்துக் கொள்வது கஸ்டமாகும். தொழில்நுட்பப் பொருளாதார வளங்களின் குறைவு காரணமாக வளர்முக நாடுகளுக்கு இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஏனெனில், தற்போதைய மனித வாழ்வும் எதிர்கால சந்ததியின் வாழ்வும் இயற்கை வளங்களை விசேடமாக உயிரியல் வளங்களை நாம் தற்போது பாவிக்கும் வளங்களிலேயே தங்கியுள்ளது.

வியட்நாம் நகரத்தில் தனக்கே உரியதான அதாவது ஆசிய நாட்டிற்கு உரியதான உயிரியல் வளங்களைக் கொண்டுள்ளது; இந்த உயிரியல் வளங்கள் வியட்நாமின் நிரந்தர வளத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அத்தியாவசியமானது. எவ்வாறாயினும் தற்போது இவ்வளங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. இது பலவித காரணங்களினால் நிகழ்கின்றது, வனவளம், ஈரவலயக் காடுகள் வேகமாக அழிக்கப்படுகின்றன. இதனால் 355 தாவர இனங்களும், 365 மிருக இனங்களும் அழியும் தறுவாயில் உள்ளன. வியட்நாமில் உயிரியல் தொடர்புகள் உஷ்ணவலயக் காடுகள் பரந்துபட்டதும், முறியக்கூடியதும் எளிதில் அழியக்கூடியதுமாக தற்போதைய நிரந்தர காலநிலை அற்ற சூழ்நிலையினால் ஏற்படுகின்றது. உயிரியல் தொடர்புகள் 0.1% காலநிலை மாற்றத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடியதே.

ஆனால் பசுமை வீட்டுத் தாக்கத்தின் காரணமாக 2 அல்லது 3 மடங்கு பசுமை வீட்டுத் தாக்கம் கடந்த 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இராத வகையில் அதிகரித்துள்ளது.

மனித இனம் காலநிலை, சுற்றாடல் மாற்றத்திற்கமைய தனது சுற்றாடலை மாற்றலாம். ஆனால், தாவர மிருகங்கள் இவ்வாறில்லை. கூடுதலான இனங்கள் அழியும் தறுவாயில் ஏற்படுத்திக் கொள்ளும் இவ்வித காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத காரணங்களினால் காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்க முடியாத இனங்கள் குறைந்தளவு உள்ள இனங்களில் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றது. உலக பாதுகாப்பு ஒன்றியம் உலகளாவிய ரீதியில் கணக்கிட்டுள்ளார்கள். ஆபத்தை எதிர்நோக்கியுள்ள காரணம் பல. வியட்நாம் தேசத்தில் 600 இனங்களாகும் உயிரியல் இனங்கள் அழிதல், பரம்பல் குறைதல் மனித வர்க்கத்திற்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

உலகம் உஷ்ணமடைவதாலும், காலநிலை மாற்றத்தாலும் ஜந்துக்களும், வைரசுகளும் உண்டாகின்றன. மனித இனத்திற்கும், தாவரத்திற்குமே நோய்களை உண்டாக்கும் வைரசுகள் உண்டாகின்றன.

அடுத்த தாக்கம் கடல்நீர் உயர்தல். வியட்நாமில் கடல்நீர் மட்டும் மற்றைய சில இடங்களைப்போல இந்த நூற்றாண்டில் 10 செ.மீ உயர்ந்துள்ளது. அடுத்த நூற்றாண்டு இறுதிக்கிடையில் இன்னும் 20 செ.மீ. கடல் மட்டம் உயருமென்றும் விஞ்ஞானிகள் அளவிட்டுள்ளனர். இவ்வித நீர் உயர்வின் காரணமாக தாழ் பகுதிகள் நீரில் மூழ்கக்கூடிய அபாயம் ஏற்படக்கூடும். வியட்நாம் 3000கி.மீ. கடற்பரப்புக்களைக் கொண்டது.

வியட்நாமின் பலவிதமான உயிரியல் அமைப்பு சிறிய கரையோரத் தீவுகளையும் பாரிய முருகைக் கற்களையும் அடக்குகின்றன. இவ்வித பல்வேறுபட்ட உயிரியல் வளங்கள் விஞ்ஞான ரீதியில் மட்டுமல்ல உயிர்வாழ்வினை சமநிலைப்படுத்தும் தன்மைக்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் அத்தியாவசியமானதாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல்நீர் உயர்வால் தாழ்பகுதிகள், கடற்கரையோரங்கள் அரிப்புக்குள்ளாகின்றன. கரையோர வெள்ளங்கள் கடலேரிகள் மற்றும் அதைத் தொட்டுள்ள நீர் நிலைகளில் மாற்றம் ஏற்படும் (tytils) ஆறுகளிலும் முகத்துவாரங்களிலும் நீர் மட்டம் உயர்தலில் வேறுபாடு ஏற்படுத்தல், ஆற்றில் உள்ள நீர் வேறு இடங்களில் போய் அடைதல் போன்றவற்றை ஏற்படுத்தும். ஆழமற்ற கடல்நீர் அதிகரிப்பினால் கரையோரக் கடலாழம் கூடும். ஆகையினால், நீர் கூடிக் குறைதலில் மாற்றம் ஏற்படும். உயிரியல் கண்டல் தாவர அழிவை ஏற்படுத்தும். கண்டல் அற்றுப்போகும் நிலையையும் ஏற்படுத்தும். நிலவிவந்த உயிரியல் தொடர்பு நிரலில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

கடைசியாக நீர் வாழ்வன, மீன் ஆகியன ஆரம்ப வளர்ச்சி, நத்தைகள், ஊரிகள் முற்றாக ஆழியும். 2000000 ஹெக்டேயருக்கு மேலாக வியாபித்திருக்கும் கண்டல் தாவரக் காடுகள் அதில் வாழும் பல இன மிருகங்களுக்கும் கடல் வாழ் பிராணிகளுக்கும் இருப்பிடமாக அமைகிறது; இவை அப்பகுதி வாழ் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெரும்பங்களிக்கின்றன. கண்டல் காடானது வளர்ந்து முதிர்ச்சியடைவதற்கு 100 தொடக்கம் 1000 ஆண்டுகள் செல்லும். குறிப்பிட்டளவு கடல் நீர் உயர்வு இக்காடுகளில் வாழும் உயிரினங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும். உயிரின வாழ்க்கைத் தொடர்பையும் பாதிக்கும். கடல் நீர் உயிர் வாழ் கலப்புகள், கடல் ஆமைகளின் பரம்பல் இடங்கள், பவளக் கற்பாறைகளும் பாதிக்கப்படுகின்றன.

எமது நாடும் அதன் இயற்கை வளத்திலேயே தங்கியுள்ளது. காலநிலை மாற்றத்தால் ஏற்படும் உயிரியல் பாதிப்புக்கள் எதிர்காலப் பொருளாதார சமூக முன்னேற்றங்களைப் பாதிக்கும்.

காலநிலை மாற்றம் ஓர் உலகளாவிய பிரச்சினையாகும். ஆகவே, உலக நாடுகளின் ஒருமைப்பாடு அத்தியாவசியமாகும்.

(இக்கட்டுரை வியட்நாம் நகரைப் பற்றியதாகும். இதே தாக்கம் எமது நாட்டிற்கும் உரியதாகும். எனவே, வளப் பயன்பாடு வரையறுக்கப் படவேண்டும்.)

## காடழித்தலும்...

6ம் பக்கத் தொடர்ச்சி...

1978 இருந்து 1989 வரையான மழைவீழ்ச்சியை நோக்கின் 1978ல் 1700mm மழையும், 1989இல் 1100mmம் பெய்துள்ளது. இது ஒரு இயற்கை அனர்த்தம். இயற்கையை நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் செயற்கையாக மனிதனால் காடுகள் அழிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துதல் எம் கடமை.

காடுகள் கருணையுள்ளம் கொண்டவை. கொடுப்பதில் குபேரனையும் மிஞ்சுவது. அது எம்மிடமிருந்து எதையுமே எதிர்பார்ப்பதில்லை. ஆனால், அதன் மூலம் பயனை மட்டும் பெறும் மனிதன், அதை அழிப்பது இரக்கமற்ற செயலாகும். யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்ட நாடுகள் பாதுகாப்பைக் கருதிக்காடுகளை அழிக்கின்றன. இவ்வாறு மனிதனும் இயற்கையுடன் சேர்ந்து அழிக்க நினைப்பதால் இன்று அவனே அதன் எதிர்விளைவை அனுபவிக்கின்றான். அதனால் தான் இன்று வெப்பம் அதிகமாக உயிரை வருத்துகின்றது. பயிர் பச்சைகள் கருகுகின்றன. விலங்கினங்கள் இறக்கின்றன. காடுகள் பாலைவனமாக மாறுகின்றன. இதனால் காலத்திற்கு மழை இல்லை. காலம் மாறி வெப்பப் புழுக்கம். அது மட்டுமல்ல சிறிய மழை பெய்தால்கூட வெள்ளப் பெருக்கு. நிலங்கள் தரிசாக்கப்பட்டு விட்டதால் வெள்ளத்தினால் மண்ணரிக்கப்பட்டு நீர்நிலங்களைச் சென்றடையும். இதனால் நீர் நிலங்கள் வற்றக்கூடிய அபாயநிலையும் உருவாகும். அத்துடன் நீர் நிலைகளிற்கு அருகில் உள்ள மரங்கள் அழிக்கப்படுவதால் அருகில் உள்ள நிலப்பரப்பை நீர் ஆட்கொள்ளும். அண்மைக் காலத்தில் புத்தளத்தில் இறால் வளர்ப்பை மேற்கொண்டனர். இதனால் இன்று அக்கிராமமே நீரில் முழ்கும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே காடுகளை அழித்ததால் சூழல் சமநிலை நிலையில் ஏற்பட்ட தாக்கத்தை ஈடுசெய்வதற்கு மனிதர்களாகிய நாம் நம் கவனத்தை திசை திருப்ப வேண்டிய காலம் உருவாகிவிட்டது. இன்று இயற்கையுடன் மனிதன் ஒன்றிப்பிணைந்த வாழ்க்கை மாறி இயற்கை மனிதனின் எதிரியாக மாறிவிட்டது. இதற்கு காரணம் காடுகளை அழித்ததே என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். வளியிலோ நிலத்திலோ மாசடைவு ஏற்பட்டுள்ளதென்றால் அதுவும் காடழித்தலாலேயே உருவானதெனலாம். எனவே இன்று காடுகளை அழித்ததால்தான் சூழல் சமநிலையில் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1995 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சூழல் விழிப்புணர்வு மன்றங்களும் அவை நடைமுறைப்படுத்திய திட்டங்களும்

| | சூழல் மன்றம் | இடம் |
|---|---|---|
| 01. | சோலைத்தென்றல் சூழல் மன்றம் | புன்னைச்சோலை |
| 02. | சூழல் பாதுகாப்புக் குழு | திராய்மடு |
| 03. | சூழல் விழிப்புக் குழு | மீராவோடை |
| 04. | விண்மீன் சூழல் மன்றம் | சந்திவெளி |
| 05. | சீ.டீ.எப் சூழல் மன்றம் | சித்தாண்டி |
| 06. | சூழல் பாதுகாப்பு மன்றம் | காத்தான்குடி |
| 07. | விபுலானந்தா இந்து கலாச்சார சூழல் அணி | தேற்றாத்தீவு |
| 08. | விநாயகர் விவசாயக் குழு | திக்கோடை |
| 09. | விஷ்ங்கேணி சூழல் மன்றம் | விஷ்ங்கேணி |
| 10. | முஸ்லிம் சமூக அபிவிருத்தி நிறுவனம் | ஏறாவூர் |
| 11. | ஆதவன் சூழல் மன்றம் | நாவற்குடா |
| 12. | இராமகிருஷ்ண சூழல் மன்றம் | வேலூர் |
| 13. | இளைஞர் கழகம் | கல்லடி |
| 14. | தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் | சதாம்ஹுசன் கிராமம் |
| 15. | சூழல் பாதுகாப்பு மன்றம் | காங்கேயனோடை |

மேற்படி மன்றங்கள் 1995ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய திட்டங்களும் செயற்பாடுகளும்

- மரக்கன்று உற்பத்தி/ விநியோகம்
- மரநடுகைத் திட்டம்
- சமூகக் காடு வளர்ப்பு
- வடிகால் புனரமைப்பு
- பொது இடங்களில் சிரமதானம்
- மண் அகழ்வை தடை செய்தமை
- சூழல் பற்றிய கலை, கலாச்சார நிகழ்ச்சிகள்
- சூழல் பற்றிய கண்காட்சி
- நண்டு வளர்ப்புப் பற்றிய ஆலோசனை
- குளக்கட்டுத் திருத்தம் (திக்கோடை)
- வைத்தியசாலை விஸ்தரிப்பு
- சமூக அறிவூட்டல்
- கழிவுக் கடதாசி சேகரிப்பு

திரு. த. பகிரதன்
(உதவி ஆய்வாளர்)
மன்று.

# 1995ஆம் ஆண்டு மரநடுகை

நவம்பர் மாதம் வரை மொத்தம் 31478 கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் 8852 கண்ணாக் கன்றுகள் —

பாலமீன்மடு, மட்டிமடு, ஊரிமடு, சித்தாண்டி திகிலிவெட்டை, ஓட்டமாவடி, முறக்கொட்டாஞ்சேனை, காங்கேயனோடை, புதுமுகத்துவாரம், ஆகிய பொது இடங்களில் நடப்பட்டுள்ளன.

ஏனைய 22626 பழ மரங்களும், காட்டு மரங்கள், பிரயோசனமான மரங்களும் —

35 கிராமங்களில் உள்ள வீடுகளுக்கும், இளைஞர் கழகம், கன்னன்குடா, இளைஞர் புனர்வாழ்வுக் கழகம், கிரான்குளம், பிரதேச சபை ஓட்டமாவடி, பிரதேச சபை மண்முனைப்பற்று, ஸ்ரீ பாலமுருகன் ஆலயம், தேற்றாத்தீவு, பிரதேச சபை ஏறாவூர் நகர், கிராமோதய சபை, குளக்கோட்டன், கிராம அபிவிருத்திச் சங்கம், திகிலிவெட்டை விபுலானந்தா இந்து கலாச்சாரப் பொதுப்பணி மன்றம் தேற்றாத்தீவு, குருகுலம், களுதாவளை, பிரதேச செயலகம் மண்முனை வடக்கு, திராய்மடு வித்தியாலயம், அருட்சகோதரர்கள் இல்லம், முகத்துவாரம், ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம் சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயம், கிராம அபிவிருத்திச் சங்கம், இலுப்படிச்சேனை, கல்லடி (இளைஞர் கழகம்), ஆகிய பொது இடங்களிலும்.

சமூகக் காடு வளர்ப்பிற்காகவும், கரையோரப் பாதுகாப்பிற்காகவும் —

குளக்கோட்டன், காத்தான்குடி, ஓட்டமாவடி, கல்லடி, முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, காங்கேயனோடை ஆகிய இடங்களிலும் நடப்பட்டுள்ளன.

திரு. வ. இராமலிங்கம்
(திட்ட உத்தியோகத்தர்)
மன்று.

**குழந்தைக்காக ஒரு மரம் நட்டால் அது அவர்களிற்கு கைகொடுக்கும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்டு பிடியுங்கள்;
## பரிசு உங்களுக்கே;

### போட்டி இல. 13ற்கான விடைகள்

01. நாகா
02. காளான்
03. பொட்டாசியம், சிலிக்கா
04. அனகி அடுப்பு
05. உயிர்ச்சத்து A
06. கடனீரேரி
07. நைதரசன் அளவு கூடும்
08. வேப்பம் விதைச்சாறு, காஞ்சோண்டி
09. கூட்டெரு
10. உலர் வலயம்

### போட்டி இல. 13ற்கான முடிவுகள்

1ம் இடம் - செல்வன் பி. தியாகசீலன்
மட்/ஸ்ரீ விநாயகர் வித்.
தாழங்குடா.

2ம் இடம் - கிருஷ்ணன் ஜெயகாந்
ஆண்டு - 12
மட்/பட்டிருப்பு மத்திய ம.வி.
களுவாஞ்சிக்குடி.

3ம் இடம் - நாகலிங்கம் சுதர்ஷினி
ஆண்டு - 9
மட்/வின்சன்ட் மகளிர் உ.பாட.
மட்டக்களப்பு.

## கண்டு பிடியுங்கள்;
## பரிசு உங்களுக்கே;

### போட்டி இல. 14ற்கான விடைகள்

01. உயிர்ச்சத்து A
02. நெல்லி, தேசி
03. நைதரசனின் அளவு அதிகரிப்பதால்
04. குப்பைகளை எரித்தல், ஜெட் விமானம் கழிவு வாயுக்கள்
05. செயற்கைக் கிருமி நாசினிப் பாவனை நிலத்தில் எண்ணெய்க் கழிவுகளைச் சேர்த்தல்
06. வெப்பம் அதிகரித்தல்
07. ஓசோன் படைப் பாதிப்பு
08. அதன் துர்நாற்றத்தில் பூச்சிகள் நெருங்காது
09. மண்புழு
10. ஊட்டச்சத்துக்கள்

### போட்டி இல. 14ற்கான முடிவுகள்

1ம் இடம் - கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி
வித்தியாலயம், புதுகுடியிருப்பு.

2ம் இடம் - வே. உமாகரன்
சாகாமா வீதி,
அக்கரைப்பற்று.

3ம் இடம் - நஜ்மா முஹமட்
மட்/புனித சிசிலியா ம. வித்.
மட்டக்களப்பு.

# முந்திரிகைப் பழப்பாணி

முந்திரிகைப் பழங்களைக் கழுவிச் சாற்றைப் பிழிந்து சுத்தமான துணியால் நன்றாக வடித்து 1 போத்தல் சாற்றிற்கு 1 மேசைக்கரண்டி சுண்ணாம்பும் சிறிதளவு பழப்புளியும் சேர்த்துக் கரைத்து வடித்து 6 மணிநேரம் வைக்கவும். பின்பு திரும்பவும் வடித்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். காய்ச்சும்போது மேலேவரும் நுரையை அகற்றிவிடவும். சாறு பதமாக இறுகி வந்ததும் இறக்கி ஆறவிட்டுப் பின்பு உலர்ந்த போத்தலில் ஊற்றி இறுக்கமாக அடைத்து வைத்து பல காலங்களுக்கு வைத்துப் பாவிக்கலாம்.

ஆக்கம்: திருமதி. நடேஸ்வரி நவரெத்தினம், பாடவிதான உத்தியோகத்தர் (ப.பெ.வி.வி.)
மாவட்ட விவசாயத் திணைக்களம், மட்டக்களப்பு.

நன்றி: உழவன், இதழ் 2. 1993.

**இயற்கையின் சீற்றத்தை தணிக்க இயன்றவரை பாடுபடுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

- 4.12.1995 அன்று சூழல் மன்றங்களுக்கான பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் 7 சூழல் மன்றங்களும், ஏறாவூர் தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் கலந்துகொண்டன.
- மனைப்பொருளியல் பாடவிதான உத்தியோகத்தர், திருமதி. நவரெட்ணம் அவர்களால் 18.13.95 அன்று மன்றுவில் சமையல் வகுப்பு நடாத்தப்பட்டது.
- ஏறாவூர் நகர சபை ஊழியர்களுக்குக் கழிவுக் கடதாசி பற்றிய கருத்தரங்கு வெகுவிரைவில் நடாத்தப்படும்.
- மனித உரிமைகள் தினத்தை நினைவு கூரும் முகமாக 10.12.95 அன்று சீ.டீ. எப்.பில் சூரியா, தடாகம் ஆகிய நிறுவனங்கள் சேர்ந்து அப்பகுதியில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மனித உரிமைகள் பற்றிய நிகழ்ச்சி ஒன்றை நடாத்தினர்.
- கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று உள்ளூர் நிறுவனங்களின் அங்கத்தவர்களுக் கான முகாமைத்துவப் பயிற்சி இம்மாதம் நடைபெற்றது.
- காத்தான்குடி றிஸ்வி நகரில் உள்ள பெண்களை சூழல் சம்பந்தமான வேலைகள் செய்ய ஊக்குவிப்பதற்காக சந்திக்கவுள்ளனர்.
- 3.12.95 அன்று கல்லடி இளைஞர் கழகங்கள் ஒன்றுசேர்ந்து நடாத்திய கலந்துரையாடலில் பங்குகொண்டு கரையோரங்களில் மரநடுகையை மேற்கொள்வது பற்றி கலந்துரையாடினர்.

PRINTED MATTER

IN06. MR. K. SANMUGAM
TEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHRUMOOLAI.

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மட்டக்களப்பு ஜெஸ்கொம் அச்சகத்தில் அச்சிட்டு, மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org